1971 ஜூன் 29]

கள் அந்த மருத்துவ மனைக்கு வருவதால், ஒரு மருத்துவரால் அவர்களைச் சரியாக கவனிக்க முடியவில்லை. இன்னும் அதிகமான மருத்துவரை இந்த பிரைமரி ஹெல்த் சென்டரில் நியமிக்கிற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே. இந்தக் கேள்வி தனிக் கேள்வியாக இருந்தாலும், ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஏற்கெனவே ஒரு டாக்டர் கூட இல்லாத நேரத்தில், இப்போது ஒரு டாக்டராவது இருக்கிறார் என்று கருதி திருப்தி அடைய வேண்டும். இன்னும் கொஞ்சம் காலம் கழித்துத்தான் இரண்டாவது டாக்டரைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க முடியும்.

Discharged Prisoners' Society

* 81 Q. THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any grant is given to the Tamil Nadu State Discharged Prisoners' Society by the Government; and

(*b*) if so the details thereof for the years 1969–70–71?

THE HON THIRU S. MADHAVAN :

(*a*) Yes.

(*b*) 1969-70 Rs. 12,000 (in two instalments.)

1970–71 Rs. 12,000 (in two instalments.)

திரு. ஏ. சுவாமிதாஸ் : சார், இப்போது அவர்களுக்கு அளிக்கும் கிராண்ட் தொகையை இன்னும் கூடுதலாகக் கொடுக்கவும், இந்த மாதிரி சொசைடி இல்லாத இடங்களில் கூடுதல் சொசைடி தொடங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநிலம் முழுவதும் உள்ள சங்கம் இது. இன்னும் அதிகப்படுத்தும் நோக்கம் இல்லை.

சிறைக் கைதிகளுக்குக் கட்டாயக் கல்வி

* 82 **திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிறைக் கைதிகளுக்குக் கட்டாய கல்வி அளிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, ஜெயிலில் உள்ளவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிப்பதன் மூலம் அவர்களுக்கு நல்ல அறிவு வளருமே. ஆகவே, அவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, பொதுவாக யார் படிக்க முன்வருகிறார்களோ, அவர்களுக்குத் தேவையான வசதி கொடுக்கப்படுகிறது. வெளியே வந்து படிக்க விரும்பினால் அனுமதி கொடுக்கப்படுகிறது. தேர்வு எழுதக்கூட வசதி செய்யப் படுகிறது. கட்டாயம் இப்போது தேவையில்லை என்று கருது கிறோம்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, ஜெயிலில் இருக்கும் போது தமிழ் ஆசிரியர்கள் படிப்பு படித்து விட்டு வேலை கிடைக் காமல் பலர் இருக்கிறார்கள் என்று அரசுக்குக் குறிப்புகள் வந் துள்ளனவா ? அப்படி வந்திருந்தால் அவற்றை நிவர்த்திக்க அர சாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட பிரச்னையை எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், சிறையிலிருந்தே பல கைதி கள் மேல்படிப்பு படித்து விட்டு சிறப்பான நிலைக்கு வந்து இருக் கிறார்கள். எங்களுடைய கட்சியின் தலைவர் பூபேஷ் குப்தா அவர் களே சிறையில் இருந்து படித்தவர் தான். இப்போது சிறையில் இருப்பவர்கள் வெளியே வரும்போது எழுதப் படிக்கக் கூடத் தெரி யாமல் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லோருக்கும் செய்வது என்பது முடியாது. ஒரு வயது வைத்து இருக்கிறோம். 30 வயதுக்கு கீழே இருப்பவர்கள் படிப்பதற்கு ஏராளமான வசதிகள் செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். 40 வயதுக்கு மேலே போய்விட்டால், கைதிகள் அவர்களாகவே படிக்க முன் வந்தால் வசதி செய்து தருகிறோம். நைட் ஸ்கூல் கூட வைத்து இருக்கிறோம். அதிலே படிக்கலாம். இப்போது செய்து இருக்கும் வசதிகளே போதுமானவை என்று கருதுகிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே. சிறைக்கூடத்தில் இருப் பவர்களுக்குப் படிப்பு சொல்லித் தருவதற்காக தகுதி படைத்தவர் கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக் கிறதா ? அங்கே சிறைக் கைதிகளாக இருப்பவர்கள் சந்தர்ப்ப வசதியினால் தண்டனை அடைந்து விட்டவர்கள். அவர்கள் வெளியே வரும்போது திருந்தியவர்களாக வர ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆசிரியர்கள் யாராவது குற்றவாளிகளாக இருக்கிறார்களா என்று கேட்பது போல் தெரிகிறது. அந்த புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. அவர் களைப் பயன்படுத்தாமல் வெளியிலிருந்து கல்வி இலாக்கா மூல மாகத்தான் ஆசிரியர்கள் வைக்கப்பட்டு இருக்கிறார்கள் எல்லா சிறைகளுக்கும் சேர்த்து இப்போது 37 ஆசிரியர்கள் இருக்கிறார் கள். இன்னும் எங்கெங்கே இந்த வசதி கேட்கப்படுமோ அங்கெல் லாம் ஏற்பாடு செய்யப்படும்.

1971 ஜுன் 29]

திரு. பெ. மலேச்சாமி : தலைவரவர்களே, சிறையில் அரசாங்கத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்கள், அவர்கள் தண்டனை காலம் முடிவதற்குள்ளாக சிறையிலிருந்து வெளியே அனுப்பப்படு வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தேர்ச்சியிலே வெற்றி பெற்றதாலே, விடுதலை கொடுக்கலாம் என்பதற்குச் சட்டம் இடம் கொடுக்காது.

ஆயுள் கைதிகளின் தண்டனைக் காலவரம்பு.

* 83. **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா.

தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனைக் கால வரம்பை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஆயுள் தண்டனைக் கால வரம்பு இத்தனை ஆண்டுக் காலம் என்று மாற்றியமைக்கப் படுமா? திறந்த வெளி சிறைச்சாலையில் வைத்து நன்னடத்தை பார்க்க வசதி செய்து, காலவரம்பு குறைக்கப்படுமோ என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆயுள் தண்டனை என்றால் ஆயுள் முழுவதும் இருக்கவேண்டியது தான். ரெமிஷன் பர்ப்ஸ்சுக்காக கணக்கிடும்போது 20 ஆண்டுகாலம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 3-லே 2 பங்கு ஆயுள் தண்டனை அனுபவித்து அதற்கென்று ஒரு அட்வைசரி கமிட்டி வைத்து, அந்தக் கமிட்டி அதைப் பரிசீலித்து, அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யும். அந்தப் பரிந்துரைகளை வைத்து 'ப்ரீமெச்சூர்' ரிலீஸ் கொடுக்க அரசு உத்தரவிடும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, ஆயுள் கைதிகள் என்றால், ஆயுள் பூராவும் இருக்க வேண்டுமென்று நான் நினைக்க வில்லை. சாதாரணமாக 10 ஆண்டுகளுக்கு மேலே அவர்கள் விடுதலை செய்வதற்கான ஏற்பாடு செய்யப்படுகிறது. இன்று பல சிறைச்சாலைகள் 15-17 ஆண்டுகள் சிறையில் கைதிகள் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆயுள் தண்டனைக் காலம் 10 ஆண்டு காலம் என்று எந்தச் சட்டமும் சொல்லவில்லை. ஆயுள் தண்டனை என்றால் ஆயுள் தண்டனைதான். விடுதலை செய்வதற்கு விதிகளில் இடம் செய்திருக்கிறோம். அந்த விதிகளின்படி 20 ஆண்டுகள் ஆயுள் தண்டனை காலம் என்று